முற்பகல் 10–05

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி–களியக்காவிளை மற்றும் காவல்கிணறு–பார்வதிபுரம், சாலைகளைச் சீரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை மற்றும் காவல்கிணறு முதல் பார்வதிபுரம் வரை உள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இந்திய தேசிய காங்கிரஸ், விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதன்முதலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை செல்கின்ற சாலை, கிட்டத்தட்ட 56 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இது மத்திய நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றது. அதேபோல், காவல்கிணறு முதல் பார்வதிபுரம் வரை செல்கின்ற சாலை கிட்டத்தட்ட 22 கிலோ மீட்டர் நீளம், NH 47B–ல் உள்ளது. இந்த இரண்டு சாலைகளும், கேரள மாநிலத்தையும், தமிழகத்தையும் இணைக்கக்கூடிய மிகவும் முக்கியமான சாலைகள். இந்தச் சாலைகள் தேசிய நெடுஞ்சாலைத் துறையின்கீழ் 2016 மற்றும் 2019 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் செப்பனிடும் பணிகளுக்காக எடுக்கப்பட்டு, பணியைத் துவங்குவதாகச் சொன்னார்கள். ஆனால், நீண்டகாலமாக இந்தச் சாலை செப்பனிடப்படாததால், சாலை பழுதடைந்து பொதுமக்கள் போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாத அளவில் பல விபத்துகள் ஏற்பட்டு, அங்கே மரணம்கூட ஏற்பட்டது. ஆகையால், இந்தச் சாலையை உடனடியாகச்

2021 ஆகஸ்ட் 19] *[திரு. செ. ராஜேஷ் குமார்]*

சீரமைத்து, செப்பனிட வேண்டுமென்று தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக வலியுறுத்திக் கேட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சீக்கிரமாக முடியுங்கள். உரிய கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *ஆனால், இந்தச் சாலை இதுவரை செப்பனிடப்படவில்லை. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்று சொன்னால், தமிழக அரசினுடைய குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பெரிய பைப்கள் இந்தச் சாலையின் இரண்டு பகுதிகளிலும் போடப்பட்டிருக்கின்றன. சாலையின் இரண்டு பக்கங்களிலும் பைப் லைன் போடப்பட்டிருப்பதால் அது போக்குவரத்திற்கு மீண்டும் தடையாக இருக்கிறது.*

அதுபோல், நாகர்கோவில் பகுதியில், மாநகராட்சியின்கீழ் பாதாள சாக்கடை கழிவுநீர்க் குழாய் பதிக்கப்படுவதற்கு, மத்திய அரசிடமும் NOC வாங்க வேண்டும். இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன. இது இரண்டு துறைகள் சம்பந்தப்பட்ட விஷயம். ஆகையால், இரண்டு துறைகளும் உடனடியாகத் தலையிட்டு அந்தச் சாலையை மக்கள் பயன்படுத்துவதற்காகச் சீரமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தச் சாலை, நாங்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்ற சாலை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார் அவர்கள் சொன்ன சாலை முழுவதும் பைப்லைன் போடவில்லை. 6 கிலோ மீட்டர் தூரம் வரைதான் குடிநீர் வடிகால் வாரிய பைப் இருக்கின்றது. மற்ற இடங்களில் செய்யலாம். அதற்கு மத்திய அரசினுடைய நிதி வேண்டும். அதை வாங்கி எப்படியாவது போட்டுத் தாருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 47 ஆனது களியக்காவிளை முதல் கன்னியாகுமரி வரை மொத்தம் நீளம் 56 கிலோ மீட்டர். இந்திய தேசிய நெடுஞ்சாலை இரவிப்புதூர்கடை முதல் அழகியமண்டபம் வரை மற்றும் தக்கலையில், மொத்தம் 6.16 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைத் தடத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் குழாய் பதிக்கப்பட்டது. அதன்பின்பு*

சீரமைப்புப் பணிகளில் சாலை அடித்தளம் அமைக்கும் பணி அதாவது, WMM என்கின்ற வகையில் நடைபெற்று வந்தது. மீதமுள்ள தார்தள சீரமைப்புப் பணிகள் விரைவில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த நிலையில், குடிநீர் வடிகால் வாரியம் பணியை ஏற்றுக்கொண்டு உடனே செய்து முடிக்கிறோம் என்று உறுதியளித்திருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முதல் இடலாக்குடி வரை 3.85 கிலோ மீட்டருக்கு பாதாள சாக்கடைப் பணிகள் நகராட்சி மூலமாக நடைபெற்று வருகின்றன. பாதாள சாக்கடைப் பணியையும், சேதமான சாலைகளைச் சீரமைக்கும் பணியையும் நாகர்கோவில் மாநகராட்சி செயல்படுத்த ஒப்புதல் பெற்று, இப்பணிக்கான ஒப்பந்தம் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. பணி விரைவில் நடைபெறும். இந்த இரு சீரமைப்புப் பணிகளும் முடிவடைந்த பின்பு, தேசிய நெடுஞ்சாலை அலகுமூலம் மேல்தள சாலை அமைக்கின்ற பணி மேற்கொள்ளப்படும்.

களியக்காவிளை, குழித்துறை, ஆனைப்பாலம் ஆகிய பகுதிகளில் 3.40 கிலோ மீட்டர் நீள சாலையில் ஏற்பட்டுள்ள சிறுநொடிகள், துறை மூலமாகச் சரி செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு முழுவதுமாக சீரமைக்கப்படும். எஞ்சியுள்ள 42.6 கிலோ மீட்டர் நீள சாலை, நொடிகள் ஏதுமின்றி நல்ல நிலையில் உள்ளது. மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக தற்போதைய சாலையை 4 வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி Bharatmala Pariyojana திட்டத்தில் பசுமைவழிச் சாலையாகச் செயல்படுத்த உள்ளது. இதனால், இச்சாலையின் மூலமாகப் பணிகள் எதுவும் மேற்கொள்ள இயலாத நிலையில், இப்பிரிவுகளால் காலமுறையில் புதுப்பித்தல் பணிகள் மட்டுமே மேற்கொள்ள இயலும். இப்பணிகளை மேற்கொள்ள கருத்துரு ஒன்று ஒன்றிய அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஒப்புதல் கிடைத்தவுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

முற்பகல் 10–10

அதேபோன்று, தேசிய நெடுஞ்சாலை எண் 47 B–ல் பார்வதிபுரம் முதல் காவல்கிணறு வரை மொத்தம் 22 கி.மீ. இதில் தேசிய நெடுஞ்சாலையில் ஒழுகினசேரி முதல் காவல்கிணறு வரை தரைதளம் அமைக்கும் பணி முடிவுற்று நல்ல

2021 ஆகஸ்ட் 19] [திரு. எ.வ. வேலு]

நிலையில் உள்ளது. இப்பிரிவில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்பட்ட பகுதியும் நல்ல நிலையில்தான் இருக்கிறது. இச்சாலையில், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பார்வதிபுரம் முதல் ஒழுகினசேரி வரை 3.60 கி.மீ. தூரத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை நாகர்கோவில் மாநகராட்சிமூலம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனைத் தொடர்ந்து, சீரமைப்புப் பணிகள், சாலை அடித்தளம் அமைக்கும் பணிகள் வரை WMM என்கின்ற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள சாலை சீரமைப்புப் பணிகளை விரைவில் முடிப்பதாக மாநகராட்சி உறுதியளித்துள்ளது. இச்சீரமைப்புப் பணிகள் முடிவுற்றவுடன், தேசிய நெடுஞ்சாலை அலகுமூலம் மேல்தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பொதுவாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒன்றிய அரசாங்கம் அதை நான்குவழிச் சாலையாக அமைப்பதற்காக ஏற்கெனவே ஒரு முன்மொழிவு புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட இயக்குநரை நானே நேரடியாக அழைத்துப் பேசினேன். உறுப்பினர் குறிப்பிட்டதுபோன்று கடந்த பத்து ஆண்டுகளாக இப்பணிகள் யாரும் கேட்பாரற்ற நிலையில் இருந்துள்ளன. மாண்புமிகு தளபதி அவர்கள் தலைமையில் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மேற்கண்ட பணிகள் குறித்து ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவுடனேயே சம்பந்தப்பட்ட இயக்குநரை நானே நேரடியாக தொலைபேசியில் அழைத்துப் பேசினேன். பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் வடிகால் வாரியப் பணிகள் முடிந்தவுடன், மேற்குறிப்பிட்ட பணிகளைத் தற்காலிகமாக சீர்செய்யும் பணிகளில் ஈடுபடலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறோம். சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களிடமும் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டு, பணிகள் விரைவில் நடைபெறவுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நாங்களெல்லாம் அடிக்கடி பயன்படுத்துகின்ற சாலை என்று அவரே குறிப்பிட்டதற்கிணங்க, இப்பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, இந்த அரசு அந்தச் சாலையைச் செப்பனிடும். (குறுக்கீடு)